# குடவாசல் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
## முன்னிலை : திருமதி.என்.சி. பரமேஸ்வரி , எம்.ஏ., பி.,எட்., (பொ)

ந.க.எண். 347 / 2023 / அ.1 நாள். 06.05.2024

பொருள் : மனைப்பிரிவு – குடவாசல் பேரூராட்சி – புல எண்கள் 225/1A, 227/1, 3, 5A, 5B, 6 மற்றும் 228/2A ல் 20005 ச.மீ பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் – இறுதி அங்கீகாரம் வழங்கி உத்திரவிடுதல்– தொடர்பாக.

பார்வை : 1) நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (கூ.பொ) , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , திருவாரூர் அவர்களின் நடவடிக்கைகள் கடித ந க . எண். 494 / 2022 / TVR / நாள். 21.09.2022 மற்றும் ம.வ / மா . ந.ஊ.அ (TVR) எண்.31/2022
2) இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள்.26.04.2024
3)குடவாசல் பேரூராட்சி மன்ற தீர்மான எண். 238, நாள். 30.05.2023
4) தொடர்புடைய ஆவணங்கள்.

*****

உத்தரவு : -

குடவாசல் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட , புல எண்கள் 225/1A, 227/1, 3, 5A, 5B, 6 மற்றும் 228/2A ல் 20005 ச.மீ பரப்பளவில் பெரும்படித்தோப்பு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவிற்கு பார்வை (1)– ல் கண்டுள்ளவாறு , நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (கூ.பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருவாரூர் அவர்களால் இசைவு வழங்கப்பட்டுள்ளது. பார்வை (2) ல் கண்டுள்ளவாறு, இப்பேரூராட்சி மன்றத்தால், மேற்படி மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் , நில அளவை எண். புல எண்கள் 225/1A, 227/1, 3, 5A, 5B, 6 மற்றும் 228/2A ல் 20005 ச.மீ பரப்பளவில் 102 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இம்மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவிடப்படுகிறது.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இத்துடன் இணைத்து வழங்கப்படுகிறது.

செயல் அலுவலர்
தேர்வுநிலை பேரூராட்சி,
குடவாசல்-612601,
திருவாரூர் மாவட்டம்.

இணைப்பு :
ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம்

பெறுதல் :
திரு.மு. ஜாவித்அலி பாதுஷா, த/பெ. முகமது ஜெகபர் 30 கோயில் தெரு குடவாசல்.

நகல் :
1. நகர் ஊரமைப்பு இணை இயக்குநர் / உதவி இயக்குநர் (கூ.பொ) , மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் , திருவாரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், குடவாசல் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
3. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், குடவாசல் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.